Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified
Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## PROGNOSTICATION 2010-2011

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 200% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to MAY 10 : 400 Nos.
  - Up to APR. 10 : 397 Nos.
- **Performance May '10 …**
  - Turnover growth : 1.42 %
  - Employment growth : 2.4%
  - 100% Attendance : 14.62%


## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. S. Vanajambika

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. T. Amala Dhas | : Plating. |
| Mr. T. Ramesh | : Production. |
| Mr. N. Murugan | : Projects. |
| Mr. A. Rathinam | : Design. |
| Mr. M. Suyambu | : Stores. |
| Mr. RM. Ravichandran | : Marketing. |
| Mr. S. Siva Kumar | : Marketing. |
| Mr. C. Babu | : Finance. |
| Mr. R. Ramesh | : QA. |
| Mr. C. Sounder Suresh | : Purchase. |
| Mr. K. Manivannan | : Production–FRP |
| Mr. G.Balachandran | : R&D. |
| Mr. Sridhar Ganapathy | : Administration |

## ACHIEVEMENT




### தோல்வி முடிவல்ல

தோல்வியை சந்தித்து துவண்டு போயிருக்கின்ற நீங்கள் தோல்விக்கான விளக்கத்தைக் குறித்த, புதிய கண்ணோட்டத்தை புரிந்து கொண்டு தோல்வி மனப்பான்மைக்கு விடை கொடுத்து, புதிய முயற்சியிலே இறங்கி வெற்றி பெறுங்கள். நீங்கள் தோல்வி அடைந்ததால் நீங்களே வாழ்க்கையில் தோற்றுவிட்டதாக அர்த்தமல்ல!

நீங்கள் தற்சமயம் வெற்றி பெறவில்லை அவ்வளவு தான்!

நீங்கள் தோல்வியுற்றால் ஒன்றையுமே எட்டவில்லை என்று அர்த்தமல்ல!

நீங்கள் ஏதோ ஒன்றை இதனால் கற்றிருக்கிறீர்கள் என்றே அர்த்தம்!

நீங்கள் தோல்வியடைந்ததால் என்றுமே வெற்றி பெற முடியாது என்று அர்த்தமல்ல!

நீங்கள் முயற்சி செய்வதில் விருப்பமுள்ளவர்கள் என்றே அர்த்தம்!

நீங்கள் தோல்வி அடைந்து விட்டதால் தரம் தாழ்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல!

நீங்கள் புதிதாக தொடங்கப் போகிறீர்கள் என்று மாத்திரமே அர்த்தம்!

நீங்கள் தோல்வி அடைந்ததால் முயற்சியை விட வேண்டும் என்று அர்த்தமல்ல!

இன்னும் கடினமாக நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்றே அர்த்தம்!

நீங்கள் தோல்வி அடைந்ததால் வெற்றியே கிடைக்காது என்று அர்த்தமல்ல!

நீங்கள் வெற்றிப் படியை நோக்கிச் செல்கிறீர்கள் என்றே அர்த்தம்!

நீங்கள் தோல்வி அடைந்ததால் இறைவன் கைவிட்டு விட்டான் என்று அர்த்தமல்ல!

இதை விட சிறந்ததையே இறைவன் வைத்திருக்கின்றார் என்றே அர்த்தம்!

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"

என்ற சொல்லுக்கிணங்க தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்

தொகுத்தளித்தவர்ஹ

Ms. P.E. நான்சி Director – Admin.

### அணுகு முறையால் வந்த வளமை

நியூயார்க் நகரத்தில் பார்வையற்ற ஒருவன் பிழைப்புக்கு வழி தெரியாமல் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். யாரும் அவனைச் சீண்டவோ, இரக்கப்படவோ காசு போடவோ முன் வரவில்லை. பின்னர், ஒரு பலகையில், நான் பார்வையற்றவன் எனக்கு உதவுங்கள்! என்று எழுதி தனது அருகில் வைத்துக் கொண்டான். இவனது நிலைமையைப் பார்த்து சிலர் உதவினார்கள். கால் வயிறும் அரைவயிறுமாக நிரப்பி வாழ்க்கையைத் தள்ளினான்.

ஒரு நாள் அந்த வழியாக வந்த இளைஞன் அந்தப் பலகையைப் படித்தவுடன் ஒடிச் சென்று அதில் உள்ள வாசகங்களை அழித்துவிட்டு வேறு வரிகளை எழுதினான். பின்பு அவன் எழுதிய வரிகளைப் படித்து விட்டு பலர் அந்தப் பார்வையற்றவருக்கு மகிழ்ச்சியுடன் உதவி செய்தனர். அவனுக்கு போதுமான பணம் கிடைத்தது. அந்தப் பலகையில் அந்த இளைஞன் எழுதி விட்டுச் சென்ற வரிகள் இது தான் இந்த நாள் மிகவும் அழகும் இனிமையும் கனிந்ததாகும். ஆனால் என்னால் அந்த வசந்த காலத்தைப் பார்க்க இயலாது0. என்று படிப்பவர்கட்கு அன்றைய பொழுதின் அருமையை உணர்த்தும் வகையில் எழுதியிருந்ததால், இந்த அணுகு முறை பிடித்துப் போய் உதவி செய்தனர். இதிலிருந்து நாம் உணர்வது —

"சரியான அணுகு முறையும் வெற்றிக்கு அவசியம்"

நன்றி தமிழ் பிரவாகம்

## FUNCTIONAL WISHES



**July 25**
**Parent's Day &**
**Guru Purnima**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. Vincent |
| Central Excise | : Mr. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Jeya Clinic,<br>HansaGarden,<br>Rajakilpakkam |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!

அவர் நல்லவராவதும் தீயவராவதும்அன்னை வளர்ப்பினிலே!

| | |
|---|---|
| **Mr. Thanga Krishnan**<br>QA | 01st July |
| **Mr. Shridhar Ganapathy**<br>Administration | 01st July |
| **Mr. M.Sankar**<br>Admin | 02nd July |
| **Mr. Sivaramamurthy –**<br>Coating | 02nd July |
| **Ms. C. Indhira**<br>M/o Mr. Abilash - Titanictrade | 04th July |
| **Mr. T. Jegan**<br>Proudction | 05th July |
| **Mr. Ruben Sonar**<br>Production | 06th July |
| **Mr. D. Lingeshwaran**<br>QA | 09th July |
| **Master S. Dinesh**<br>S/o Ms. Sasirekha -Marketing | 11th July |
| **Mr. R. Anand Raja**<br>Marketing | 21st July |
| **Mr. R. Nagan**<br>QA | 24th July |
| **Mr. Suresh**<br>Production | 24th July |
| **Mr. V. Kumar**<br>Purchase | 25th July |
| **Mr. N. Anand**<br>Facilitation | 25th July |
| **Mr. P.R. Balakumaresh**<br>Projects | 27th July |
| **Ms. V. Vinothini**<br>D/O. Ms. Rajakumari- Plating | 27th July |
| **Ms. Seethalakshmi**<br>M/o Ms. Nirmala | 29th July |
| **Mr. Rajesh R**<br>Production | 30th July |
| **Ms. V.Archana**<br>D/O. Ms. Rajakumari- Plating | 31st July |

**Best Wishes by Tiaano Employees**

## கான்.ஃ.பிடன்ஸ் கார்னர்

ῗஆயிரம் கண்ணாடிகளின் அரங்கம்ὸ ஒன்று அந்த ஊரில் இருந்தது. அதற்குள் ஒரு குழந்தை ஓடி வந்தது. தன்னைச் சுற்றி ஆயிரம் குழந்தைகளின் மலர்ந்த முகத்தை, ஒளிச்சிரிப்பை, குறும்பைக் கண்டு குதுாகலித்தது. கை தட்டியது. ஆயிரம் பிம்பங்களும் கை தட்டின. உலகிலேயே இதுதான் மகிழ்ச்சியான இடம் என்று நினைத்து அடிக்கடி அங்கு விளையாட வந்தது.

மனச்சிதைவு கொண்ட மனிதன் ஒருவன் அந்த அரங்கில் நுழைந்தான். தன்னைச் சுற்றி ஆயிரம் குரூரமான, கோபமான மனிதர்களைக் கண்டான். அச்சம் கொண்டு, அவர்களை அடிக்கக் கை ஓங்கினான். ஆயிரம் பிம்பங்கள் அவனை நோக்கிக் கை ஓங்கின. ῗஉலகின் மிக மோசமான இடம் இதுὸ என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான்.

"இந்தச் சமூகம் ஆயிரம் கண்ணாடிகளின் அரங்கம். நாம் எதை வெளிப்படுத்துகிறோமோ அதையே சமூகம் பிரதிபலிக்கிறது."

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## வெற்றி மீது வெற்றி வந்து சேரும்

வெற்றி ஒரு முறை மட்டும் வருவதில்லை. நாமும் அப்படி வருவதை விரும்புவதுமில்லை. ஒரு முறை வெற்றி பெற்ற தருணத்தில் வெற்றியினால் ஏற்பட்ட சந்தோஷம் இருக்கும் அதே வேளையில் தோன்றும் இன்னொன்று என்னவென்றால், அடுத்த வெற்றியை இதைப்போலோ அல்லது இதைவிடச் சிறப்பாகவோ பெறவேண்டும் என்பது தான்.

வாழ்கையில் சில பண்புகளை சிறப்பாக வளர்த்துக் கொண்டால் வெற்றிக் கொடி நமக்குத் தான் ஹ

- உற்சாகமும் பின்பற்றுதலும்ஹ நாம் செய்யும் செயலை உற்சாகத்துடன் தொடங்கி அதை தொடர்ந்து பின்பற்றிட வேண்டும்.
- கொள்கைஹ நாம் செய்யும் செயலை செய்வதற்கான கொள்கையை நிச்சயம் வகுத்துக் கொள்ள வேண்டும். நல்ல நோக்கமுள்ள கொள்கை வெற்றிக்கு அவசியம் தேவை.
- திறமைஹ உண்மை, தேர்ச்சி பெற்ற திறமை இவை நம் வெற்றிக்கான செயல்பாடுகளை எளிதாக்கும். இந்த பண்புகளோடு நல்லதை எடுத்துக் கொள்வோம், தீயவைகளை விட்டோழிப்போம். நல்ல நண்பர்களை உருவாக்கிக் கொண்டு, எதிரிகள் யாரும் இல்லை என்ற நிலைக்குச் செல்வோம்.
- அனுபவம்ஹ இதை அனுபவிக்க வேண்டும். கற்றதில் இருந்து கற்க வேண்டியதை கற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- காலம்ஹ எதைச் செய்தாலும் காலத்தைக் கருத்தில் கொண்டு செய்யுங்கள். காலத்தை நாம் கட்டுப்படுத்த முடியாது, அதனால், நாம் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும். காலத்தின் சரியான பயன்பாடே நம் வெற்றியின் அளவுகோல்.

நமது வாழ்க்கையின் முழுப் பொறுப்பையும் நாமே ஏற்றால் வெற்றியும் நமதே.

## படிக்கும் பழக்கம்

படிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ளும் போது வாழ்க்கை வசப்படும். தொழிலில் மட்டுமல்லாமல் வாழ்க்கையிலும் வெற்றி / தோல்வி அடைந்த மனிதர்களின் நூல்களைப் படிக்க வேணடும். அறிவு அமுதத்தை அள்ளித் தெளிக்கும் நூல்களைப் படிக்கப் படிக்க நாம் விரும்பும் இலக்குகளை எளிதாக எட்டிப் பிடிக்கலாம்.

## தெரிந்து கொள்வோம்

பார்வை இல்லாத விலங்கு வௌவால்.

ஆக்டோபஸ் போலவே பல கால்களுடன் நீரில் வாழும் உயிரினம் ஸ்குவிட். இதன் நரம்புகள் மிகவும் தடியானவை.

ஹம்மிங் பறவையால் ஒரு மணி நேரம் அசையாமல் இருக்க முடியும்.

மானுக்கு ஆண்டுதோறும் கொம்புகள் புதுசாக முளைக்கின்றன.

பறவைகளில் ஆந்தைக்கு மட்டுமே மனிதர்களைப் போல இரண்டு கண்களும், முகத்தின் முன்புறத்தில் இருக்கின்றன.

## படித்ததில் பிடித்தது

பிறர் பாரத்தை தாங்க கை கொடுத்தால்
நம் பாரத்தின் கனம் தானே குறைந்து விடும்.

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது
கலகலவெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது.

புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல. ஆயினும்
அவை என்றென்றும் உயிருடன் இருக்கின்றன.

செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர்
எதிரொலியைக் காட்டாமல் மறைய மாட்டாது.

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

By
A.Shahul Hameed Bava,
Delight Systems


## அறிஞரின் அனுபவ மொழிகள்

வெற்றி

- தன்னைத் தானே வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவர்களை விட மேலானவன்.
- பொன்னான வாய்ப்புகள் நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வந்துகொண்டே இருக்கின்றன, தொடர்ந்து வருகின்றன, நம் கதவுகளைத் தட்டுகின்றன. சமயங்களில், நாம் அவற்றை உணருவதில்லை, வாய்ப்பினை இழந்து விடுகிறோம். எப்பொழுதும் விழிப்புடன் இருப்போம், வெற்றி பெறுவோம்.
- வெற்றிக்குரிய நிபந்தனைகள் எளிமையானவை, நாம் ஓரளவு கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். எப்பொழுதும் நம்பிக்கை கொள்ள வேண்டும். பின் நோக்கிச் செல்லக் கூடாது. நம்பிக்கையே வாழ்க்கை.

தொகுத்தளித்தவர்ஹ
திரு. வேலப்பன் ஜெயக்குமார்,
நிர்வாக இயக்குனர்.

## Try Out this .......




This is hysterical. You have to try this. It is absolutely true. I feel that certain things brain cannot handle. I could not believe this. It is from an orthopedic surgeon. This will confuse your mind and you will keep trying over and over again to see if you can outsmart your foot, but you can't. It is pre-programmed in your brain!

1. While sitting at your desk, lift your right foot off the floor and make clockwise circles.
2. Now, while along this, draw the number "6" in the air with your right hand. Your foot will change direction.

There's nothing you can do about it! You and I both know how funny it is. But before the day is over you are going to try it again and again, if you've not already done so.

தொகுத்தளித்தவர்
Mr. C.Abilash – Titanictrade

## ORGANISING IDEAS

**1. Giant size TO-DO-LIST**

**2. To maintain Papers – Files – Letters in Tray – Stacks – Lying in and around drawers "HAVE A LIST WHICH SAYS "LOOK AT ME / DEAL WITH ME "**

Studies have shown that a person who works with a messy desk will spend on an average one and half hours per day either being distracted by things in their view or looking for things – SO WE LOOSE HERE "**Seven And Half Hours Per Week "**

**3. Work with clear desk**

Clean your drawers / desk; so that you will have only the prioritized task in front of you; this only can significantly increase your effectiveness.

**4. Get organized:**

- Discard all non relevant documents.
- Remove all unwanted items from desk.
- Re-organize your shelves / cupboard.
- Identify, re-organize and re-label all your files clearly.
- Have color coding e.g. yellow for marketing; blue for Accounts etc...
- Avoid fat miscellaneous files, sub-divide subjects and group them in sub-files.

**"WHEN YOU KEEP THE CLUTTER BEFORE YOU AT A MINIMUM, YOU WILL HAVE A MORE ACCURATE FOCUS ON WHAT YOU NEED TO DO, TO INCREASE YOUR DAILY PRODUCTIVITY".**

Collected by:
S.V. Kannabiran - Marketing

## கவிதைகள்

### ஆக்கங்கள்

அன்பே செய்தல் அருமை ஆகும்
அறமே செய்தல் அறிவே யாகும்

நல்லன செய்தல் நலமே ஆகும்
வல்லன செய்தல் வலிமை ஆகும்

நன்மை செய்தல் நன்றே ஆகும்
பாசம் செய்தல் நேசம் ஆகும்

பரிவே செய்தல் பண்பே யாகும்
பணிவே செய்தல் பலமே யாகும்

ஆக்கம் செய்தல் ஊக்கம் ஆகும்
வளமே செய்தல் வரமே யாகும்.

தொகுத்தளித்தவர்
Ms. C. Bavani

### ஓ மனிதனே!!

ஓ மனிதனே!
பிறப்பு ஒரு முறை தான்,
அடுத்த பிறவி பற்றி எண்ணாதேé
இப்பிறவியில் புவி அளவு புகழ் வேண்டாம்
உன் சுற்றத்தாரிடமாவது நற் பெயர் வாங்கு..
உதவி செய்து பார் ஆனந்தம் என்பதின்
பொருள் அறிவாய் அன்று é
உனக்குத் தெரிந்ததை பிறருக்குச் சொல்லத்
தயங்காதே, சுயமாய் சிந்தித்து பழகுé
பொறுமை காத்திடு, போட்டி, பொறாமை
விட்டொழி புகழ் தானாய் வந்து சேரும்..
புத்தகம் பயில்வதை மறந்து விடாதே
முழுதாய் அறிந்தவர் எவரும் இல்லைé
பிறரை பார்த்து வாழ எண்ணாதே, உனக்கு
விதிக்கப்பட்டது தான் நிலைக்கும். கிடைக்கும்é
எதிரிகளையும் நேசி, உன் நட்புக்கூட்டம்
உன்னை ஆக்கும் கூட்டமாக இருக்கட்டும் é
வாழ்க்கை வாழ்வதற்கே!! அழிவதற்குஅல்ல!!!

தொகுத்தளித்தவர்
Ms. T. Sobi- R&D

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– **Editor**

### ஒரு மகிழ்ச்சியான அறிவிப்பு

இந்த ஆண்டு (2010 – 2011) நமது நிறுவனத்தில் நடைபெற உள்ள 8ம் ஆண்டு அலுவலர் தின விழாவினை ஒட்டி ஒரு புதிய முயற்சியை நமது நிர்வாகம் மேற்கொள்ள இருக்கிறது. அதாவது, நமது அலுவலர்தம் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் யாதேனும் ஒரு துறையில் தனித் திறன் பெற்றிருந்தால், அதனை வெளிக்கொணரும் வகையில் இந்நிகழ்ச்சி அமைந்திருக்கும்.




உதாரணமாக, நமது சக அலுவலர் திரு. முனுசாமி (FIBTEC), அவர்களின் புதல்வர் திரு. செந்தமிழ்ச்செல்வன், சென்ற வருடம் கண் பரிசோதனை முகாம் நடத்தினார். அது போல, கைவினைப்பொருட்கள் தயாரித்தல் போன்ற தனித்திறன் உள்ள நமது குடும்ப உறுப்பினர்கள், தங்களின் அனுபவங்களை, தயாரிக்கும் முறைகளை, பகிர்ந்து கொள்ளவும், தயாரித்த பொருட்களை விற்பனை செய்யவும், வழி வகை செய்ய சிறிய அளவிலான ஸ்டால்களை நிர்வாகம் இலவசமாக அமைத்துத் தர இருக்கிறது.

திறமையும், விருப்பமும் உள்ளவர்கள், தங்களின் முழு விவரங்களுடன் திருமதி. ஷைலாவெங்கட் (கஸ்டமர் கேர்) அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். [கைபேசிஹ 0 – 9884100421]

பங்கேற்க பதிவு செய்துள்ளவர்கள்:

1. Ms.P வசந்தா M/o Mr. P. Porselvan
2. Ms. வரலஷ்மி W/o Mr. Balachandran &
   Ms. மீனாஷி W/o Mr. Balasubramaniamoorthy

### ELECTROLYTIC SEWAGE TREATMENT PLANT

